පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம் 12

# மூன்றாந் தவணைப் பரீட்சை - 2019

## அரசியல் விஞ்ஞானம் - II

பாடசாலையின் பெயர் : ........................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ........................................................
..................................................................................................

நேரம் 03 மணித்தியாலம்

கீழ் தரப்பட்டுள்ளவற்றுள் A பிரிவிலிருந்து 1வினாவையும் B பிரிவிலிருந்து 2வினாக்களையும் C பிரிவிலிருந்து 1வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக 5வினாக்களுக்கு விடை தருக.

Education NCP - www.edncp.lk

## A

**1.** அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்குமிடையிலான தொடர்பை விளக்குக.

**2.** அரசியல் விஞ்ஞானத்தை ஆய்வு செய்வதற்கு பின்வரும் அணுகு முறைகளுள் இரண்டை விளக்குக.

(i) விஞ்ஞான அணுகுமுறை
III. ஒப்பீட்டு அணுகுமுறை
(ii) பெண்ணியல் வாத அணுகுமுறை

**3.** பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டை விளக்குக.

(i) காலனித்துவ அரசு
III. தேசிய அரசு
(ii) நவீன ஆட்புல அரசு
IV. உலகமயமாதலும் அரசும்

## B

**4.** பாராளுமன்ற அரசாங்க முறை ஜனநாயகத் தன்மை வாய்ந்ததாயினும் செயற்திறன் குன்றிய ஆட்சி முறையாகும் இக்கூற்றை நீர் ஏற்றுக் கொள்வீரா? ஆராய்க.

**5.** பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் இலங்கையில் ஏற்பட்ட சமூக பொருளாதார, அரசியல் மாற்றங்களை விளக்குக.

**6.** டொனமூர் அரசியல் சீர்திருத்தத்துடன் தொடர்புபடுத்தி பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(i) நிர்வாக குழு முறை
(ii) சர்வசன வாக்குரிமையால் ஏற்பட்ட சமூக அரசியல் விளைவுகள்
(iii) அரசாங்க சபை

**7.** சோல்பரி அரசியலமைப்பு தொடர்பாக பின்வருவனவற்றை ஆராய்க.

(i) பாராளுமன்றம்
(II). சிறுபான்மைக் காப்பீடுகள்

## C

**8.** சோல்பரி அரசியலமைப்பின் குறைபாடே 1ம் குடியரசு அரசியல் யாப்பு தோன்றக் காரணமாய் அமைந்தது ஆராய்க.

**9.** அரசியல் கட்சிக்கும் அமுக்கக் குழுக்களுக்குமிடையிலான வேறுபாட்டை ஆராய்க.

**10.** முரண்பாடும் முரண்பாடு தீர்த்தலும் தொடர்பாக பின்வருவனவற்றுள் இரண்டை விளக்குக.

(i) முரண்பாட்டின் வகைப்பாடுகள்
(ii) முரண்பாட்டு சக்கரம்
(iii) முரண்பாட்டுத் தீர்வுச் செயன்முறை

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம் 12

# மூன்றாந் தவணைப் பரீட்சை - 2019

## அரசியல் விஞ்ஞானம் - I

பாடசாலையின் பெயர் : .......................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : .......................................................

....................................................................................................... நேரம் : **02** மணித்தியாலம்

Education NCP - www.edncp.lk

**அறிவுறுத்தல்கள் :**

**i). எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**ii). 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5) என்ற விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

---

**01 தொடக்கம் 05 வரையிலான வினாக்களில் மிகச் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**1.** அரசியல் என்பது.

I. அரசியலைக் கற்பதைக் குறிக்கின்றது.
II. செயற்பாட்டு அரசியலிலிருந்து விலகியிருக்கக் கூடியது.
III. அரசறிவியல் எனவும் பொருள் கொள்ளலாம்.
IV. அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மனித சமூகத்தின் செயன்முறையாகும்.
V. சமூக விஞ்ஞானங்களோடு அண்மைக்காலத்தில் இணைந்த எண்ணக்கருவாகும்,

**2.** அரசறிவியல் என்பது.

I. அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடாகும்.
II. ஒரு கற்கைத்துறையாக மிக அண்மைக்காலத்தில் தோற்றம் பெற்றதாகும்.
III. மனிதர்களின் அரசியல் நடத்தையையும் செயற்பாடுகளையும் பற்றிக் கற்பதில் கவனம் செலுத்துகிறது.
IV. நிலையான பொருள் விளக்கத்தினைக் கொண்டுள்ள ஒரு கற்கையாகும்.
V. சமூகத்தின் கலாசார பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**3.** அரசு என்பது.

I. சமூகத்துக்கு முன்பிருந்தே தோற்றம் பெற்றதாகும்.
II. அரசாங்கத்தின் இறைமையைப் பிரயோகப்படுத்தும் நிறுவனமாகும்.
III. சகல நிறுவனங்களையும் கட்டுப்படுத்தலைப் பிரயோகிக்கின்றது.
IV. சகல அரசுகளும் ஒத்த போக்குடையன என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.
V. சகல கோட்பாட்டாளர்களும் நிலையாக செயற்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

**4.** ஒப்பீட்டு அணுகுமுறையானது.

I. உலகம் தொடர்பான அடிப்படை வினாக்களை எழுப்பி அரசறிவியலை ஆய்வு செய்கின்றது.

II. ஒரு நாட்டின் அரசியலை சிறப்பாக விளங்கிக் கொள்வதற்கு வேறு நாடுகளின் அரசியலைப் பற்றிய அறிவைப் பெறல் முக்கியமானதாகும் என எடுத்துரைக்கின்றது.

III. அரசறிவியலில் அண்மைக்காலத்தில் தோற்றம் பெற்ற ஒன்றாகும்.

IV. 20ம் நூற்றாண்டில் அரசியல் யாப்பு மற்றும் வரலாறுகளை ஒப்பீட்டு ஆய்வு செய்தது.

V. பழமை ஒப்பீட்டு ஆய்வானது எதேர்ச்சையாக அவதானிக்கக் கூடிய சமகால அரசியல் கருத்தியல்களின் அடிப்படையில் மாறுபட்ட அரசியல் முறைமைகளை ஒப்பீடு செய்கின்றது.

**5.** பின் காலணித்துவ அரசு முறையானது

I. இவ்வரசு மாதிரியின் கோட்பாட்டுத் தாக்கத்தினை கட்டியெழுப்பியவள் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஹம்ஸா அலவி ஆவார்.

II. பின் காலணித்துவ அரசும் பெரும்பாலானவற்றில் ஜனநாயகப் பரிமாற்றம் சாத்தியமான வகையில் நடைபெற்றது.

III. பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஸ் அரசு பின் காலணித்துவம் என்ற கட்டுரை இவ்வரசு மாதிரிக்கு துணை நின்றது.

IV. காலணித்துவ அரசு முறையின் பண்புகளை பேணி வரும் ஒரு அரசு மாதிரியே இதுவாகும்.

**V.** இவ்வரசுகள் காலணித்துவக் கட்டமைப்பினை மேலும் முன்னோக்கிச் சென்றன.

**06 தொடக்கம் 10 வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுக்களுள் ஒரு கூற்று பிழையானதாயின் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.**

**6.** இறைமையானது

I. அரசு பெற்றுள்ள உயர்வானதும் தன்னியக்க அற்றதுமான அதிகாரமாகும்.

II. இச்சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் ஜீன் போடின் ஆவார்.

III. இறையானது சம்`டிவாதம் மற்றும் உலகமயமாக்களினால் பாரிய சவாலுக்கு உட்பட்டுள்ளது.

IV. புராதன இறைமைக் கோட்பாட்டாளராக ஜோன் ஒஸ்ரின் காணப்படுகின்றார்.

V. இது கோட்பாட்டு ரீதியில் ஒவ்வொரு தேர்தல்களிலும் கைமாறுகின்றது.

**7.** பிரஜை எனப்படுவது

I. இதன் தற்போதைய அர்த்தம் அரசின் உறுப்பினர் என்பதாகும்.

II. ஒரு அரசில் பிரஜை எனும் அந்தஸ்தானது பரம்பரையுரிமை மூலமாக மட்டுமே கிடைக்கின்றது.

III. அரசுக்கு அடிபணிவை காட்டுவதே பிரஜைகளின் கடமையாகும்.

IV. அரசை தவிர வேறு நிறுவனங்களின் ஊடாகவும் பிரஜை எனும் அந்தஸ்து வழங்கப்படுகின்றது.

V. அரிஸ்டோட்டலின் கருத்துப்படி பிரஜை எனப்படுபவர் அரசின் செயற்பாடுகளுக்கு நேரடியாக பங்குபற்றும் நபராவார்.

Education NCP - www.edncp.lk

8. ஒற்றையாட்சி அரசியல் யாப்பு முறையானது.

I. இது அதிகாரப் பரவலாக்கம் முறைமைகளை தற்காலத்தில் உள்வாங்கியுள்ளது.
II. இறைமையானது மத்தியரசிடமே காணப்படும்.
III. இங்கு மத்தியரசின் சுயாதீனத் தன்மை பேணப்படும்.
IV. மத்திய மாநில அரசுகளுக்கிடையில் அது காரமானது பங்கீடு செய்யப்பட்டிருக்கும்.
V. எழுதப்பட்ட யாப்பாகவும் எழுத எழுதப்படாத யாப்பாகவும் கூட இருக்கும்.

9. ஜனாதிபதி அரசியல் அமைப்பு முறைமையானது.

I. ஒரு தனிநபரின் மூலமே நிறைவேற்று அதிகாரம் கையாளப்படும்.
II. நிறைவேற்றுத்துறைக்கான பொறுப்பாளர் மக்களினாலும் தெரிவு செய்யப்படுவார்.
III. சட்டத்துறைக்கு கூட்டாகப் பொறுப்புக் கூறுவது காணப்படாது.
IV. அரசின் தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் ஒருவரே காணப்படுவார்.
V. உண்மை, நாமம் என்ற இருவகை நிறைவேற்றுப் பகுதிகள் காணப்படும்.

10. கலப்பு அரசியலமைப்பு முறையானது

I. ஜனாதிபதி மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்படுவார்.
II. ஜனாதிபதிக்கு குறிப்பிடத்தக்களவு நிறைவேற்று அதிகாரங்கள் காணப்படும்.
III. ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு கட்டாயம் பொறுப்புச் சொல்லக் கடமைப்பட்டுள்ளார்.
IV. நிறைவேற்று அதிகாரத்துக்கான பொறுப்பாக ஜனாதிபதியும் பிரதமர் மற்றும் அமைச்சரவையும் காணப்படல்.
V. அமைச்சரவை பாராளுமன்றின் பெரும்பான்மை விருப்பம் உள்ளவரைப் பதவியில் இருத்தல்.

**11 – 15 வரையிலான வினாக்களுள் சரியான கூற்றுக்களின் சேர்மானத் தொகுதியை இனங்காண்க.**

11. அரசியல் கருத்தியல்களாகக் கொள்ளப்படுவது

A. குடியரசுவாதம்
B. மதச்சார்புடைவாதம்
C. பெண்ணியல்வாதம்
D. தேசியவாதம்
E. ஜனநாயக சோ'லிஸ வாதம்

I. ABCD ii. ACDE iii. BCDE iv. ABCE v. ABDE

12. தாராண்மைவாத சிந்தனையாளர்களாக கருதப்படுபவர்கள்

A. தோமஸ் ஹொப்ஸ்
B. மொண்டஸ்கியூ
C. மாக்கியவலி
D. ஜோன் லொக்
E. ஜீன் லொக் ரூசோ

I. ABCD ii. ACDE iii. BCDE iv. ABCE v. ABDE

Education NCP - www.edncp.lk

13. முதலாளித்துவத்தை சமவுடைமைவாத அடிப்படைகளுக்கு ஏற்ப மறுசீரமைப்புச் செய்யும் போது கொள்கை ரீதியான அடிப்படைகளாவன

A. பொருளாதாரத்துறையில் அரசின் தலையிடாத்தன்மை

B. கலப்புப் பொருளாதாரம்

C. சமூக நலன்புரி

D. செல்வம் மற்றும் வருமானங்களை சமூகத்துக்கு மீளப்பகிர்ந்தளித்தல்

E. கூட்டுப் பேரம் பேசுதல்

I. ABCD ii. ACDE iii. BCDE iv. ABCE v. ABDE

14. கட்சி வகைப்பாட்டுக்குள் உள்ளடங்குபவன

A. வலதுசாரி, இடதுசாரிக் கட்சிகள்

B. காடர், மஹஜனக் கட்சிகள்

C. அரசியல் அமைப்புசார் கட்சிகள், புரட்சிகர கட்சிகள்

D. பொதுமக்கள் கருத்துக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள், பொதுமக்கள் கருத்துக்களை ஒழுங்கமைக்கும் கட்சிகள்.

E.முதலாளித்துவக் கட்சிகள், கம்யூனிசியக் கட்சிகள்

I. ABCD ii. ACDE iii. BCDE iv. ABCE v. ABDE

15. சிவில் சமூகம் பற்றிய தரிசனை அரசறிவியலில் ஏற்படுவதற்கான காரணங்கள்

A. பிரசைகள் அரசியலில் பங்குபற்றலுக்கு அரசியல் கட்சிகளால் வழங்கப்படாத புதிய வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு

B. ஜனநாயகத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு

C. சிவில் சமூக இயக்கங்கள், அரசியல் கட்சிகளுக்கும் அப்பால் சமாந்தரமாகவும் அரசியல் செயற்பாடுகள் நடைபெறும் நிறுவனங்களாக உள்ளனர்.

D. அரசியல்வாதிகளுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் அரசியல் அறிவை ஊட்டுகின்றமை.

E. அரசுகளிலும் அரசியல் கட்சிகளிலும் சுயாதீன மற்றும் வேறுபட்ட சமூக அரசியலில் தேவைகளை சிவில் சமூகம் பிரதிநிதித்துவம் செய்தல்.

I. ABCD ii. ACDE iii. BCDE iv. ABCE v. ABDE

**16 - 21 வரையிலான வினாக்களுள் பிழையான கூற்றுக்களின் சேர்மானத் தொகுதியை இனங்காண்க.**

16. நவீன தேசிய அரசானது

A. இவ்வரசு முறையில் பன்மைவாதம் என்ற எண்ணக்கரு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

B. தேசத்தை அபிவிருத்தி செய்வதில் வெற்றி கண்டுள்ளது.

C. இவ்வெண்ணக்கரு புராதன காலத்திலிருந்தே வளர்ச்சி பெற்று வருகின்றது.

D. இவ்வெண்ணக்கரு இறைமை எனும் சித்தாந்தத்தை பாராதீனப்படுத்தியுள்ளது.

E. முதலாவது நவீன தேசிய அரசாக ஸ்பெயின் அடையாளப்படுத்தப்படுகின்றது.

I. ABCD ii. ACDE iii. BCDE iv. ABCE v. ABDE

Education NCP - www.edncp.lk

**17.** சர்வதேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளர்கள்

A. உள்நாட்டு அரசியல் வசதிகள்
B. தனிப்பட்டவர்கள்
C. அரசுசார் நிறுவனங்கள் மட்டும்
D. கிராம செல்வந்தர்கள்
E. சுதந்திரமான, இறைமைமிக்க அரசுகள்

I. ABCD ii. ACDE iii. BCDE iv. ABCE v. ABDE

**18.** அரசாட்சி முறையானது

A. தெய்வீக வழியுரிமையையே குறிக்கின்றது.
B. இது சர்வாதிகாரத்தன்மை பொருந்தியதாகவே காணப்படுகின்றது.
C. இது நவீன அரசியலில் பெரும்பாலான நாடுகளில் காணப்படுகின்றது.
D. தனிநபரினால் நடைமுறைப்படுத்தப்படும் ஆட்சி முறையாகும்.
E. இவ்வாட்சி முறையில் பிரஜைகள் என்ற எண்ணக்கரு முக்கியம் பெறுகின்றது.

I. ABCD ii. ACDE iii. BCDE iv. ABCE v. ABDE

**19.** அரசாங்கம் என்பது

A. தொடர்ச்சியான இயல்பினைக் கொண்ட அதிகாரக் கட்டமைப்பாகும்..
B. நீதித்துறையொன்று கட்டுப்பாட்டுடனும் கடப்பாடுடனும் அமையும் நிறுவனமாகும்.
C. ஜனநாயக ரீதியாக வரையறுக்கப்பட்ட காலத்தில் தெரிவு செய்யப்படக் கூடியதாகும்.
D. பிரஜைகளினதும் ஆதரவைப் பெற்றது.
E. ஒரே அரசு ஒரே அரசாங்கம் என்ற தன்மையைக் கொண்டுள்ளது.

I. ABCD ii. ACDE iii. BCDE iv. ABCE v. ABDE

**20.** அமுக்கக் குழு என்பது

A. அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்காகக் கொண்டுள்ள மக்கள் குழு
B. பொது நல மேம்பாட்டுக்காக ஒன்றிணைந்த சமூக நிறுவனம்.
C. ஜனநாயகத்துக்கு பாரிய சவாலாக அமைந்துள்ள மக்கள் குழு
D. அரசுக்குக்குக் கட்டுப்படாத சமூகத் தாபனம்
E. குழுவாக ஒன்றிணைந்து சட்டம், அரசு, கொள்கை, அரச தீர்மானங்களுக்கும் அழுத்தம் கொடுக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட பிரஜைகள் குழு

I. ABCD ii. ACDE iii. BCDE iv. ABCE v. ABDE

Education NCP - www.edncp.lk

**21 - 25 சரியான கூற்றை இனங்காண்க.**

**21.** ‘அரசு என்பது வரையறுக்கப்பட்ட ஆள்புலப் பிரதேசத்தில் பலாத்கார அதிகாரத்தை வெளிப்படையாகப் பயன்படுத்தும் தனியுரிமை தமக்கே உரித்து எனக் கூறும் மனிதக் குழுவாகும்.’ என்ற கூற்றுக்குரியவர்.

A. அரிஸ்டோட்டில்

B. கர்ணர்

C. மெக்ஸ்வெபர்

D. மாக்கியவல்லி

E. லஸ்கி

**22.** முரண்பாடுகள் தோன்றுவதற்கு காரணமாக அமையாதது

A. பொருளாதார, சமூகக் காரணிகள்

B. அரசியல் காரணிகள்

C. கலாசார காரணிகள்

D. கட்டமைப்புசார் காரணிகள்

E. சட்ட தோற்றுவாய் சார்ந்த காரணிகள்

**23.** தற்கால உலகில் அரசொன்றின் பணி

A. சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளை புறந்தள்ளுவது

B. பெரும்பான்மை சமூகத்துக்கு சார்பான கொள்கை உருவாக்கம்

C. குறுகிய கால அபிவிருத்தித் திட்டங்கள் மூலமே செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துதல்.

D. சட்டத்தினதும் சமூக வலையமைப்பினதும் சொத்துக்களின் பாதுகாவலாக தொழிற்படல்.

E. மனித சுதந்திரத்துக்கு எவ்வித கட்டுப்பாடுகளும் விதித்தலாகாது.

**24.** குடியரசுவாதக் கருத்தின் வளர்ச்சிக் கட்டத்துள் உள்ளடங்காதது

A. பழமை குடியரசு வாதம்

B. உரோமானிய குடியரசு வாதம்

C. ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கால குடியரசு வாதம்

D. 18ம் நூற்றாண்டு பிரான்ஸ் மற்றும் அமெரிக்க குடியரசு வாதம்

E. 20ம் நூற்றாண்டு குடியரசு வாதம்

**25.** கிரேக்க நகர அரசு தொடர்பான பிழையான கூற்று

A. அரசியல் தொடர்பில் ஒழுங்கமைந்த முதலாவது அரசு முறையாகக் கருதப்படுகிறது.

B. சிறிய நிலப்பிரதேசத்துல் ஒழுங்கமைந்த மக்களுடன் கூடிய ஆட்சி முறையாகும்.

C. நகர அரசுகளின் ஆட்சி செயற்பாடு.

D. கிரேக்க நகர அரசுகளில் நேரடி ஜனநாயக ஆட்சி காணப்பட்டது.

E. மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் மூலமே ஆட்சி செயற்பாடுகள் கொண்டு நடாத்தப்பட்டன.

Education NCP - www.edncp.lk

| இலக்கம் | கூற்று -1 | கூற்று -2 |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மை |
| 2 | உண்மை | பொய் |
| 3 | பொய் | உண்மை |
| 4 | பொய் | பொய் |
| 5 | உண்மை | முதல் கூற்றை மேலும் விலக்குதல் |

| கூற்று – 1 | கூற்று - 2 |
|---|---|
| **26.** கோல்புறூக் சீர்திருத்தத்தினால் இலங்கையில் காணப்பட்ட இரட்டை நிர்வாக முறையானது இல்லாது செய்யப்பட்டு முழு நாடும் ஒரே நிர்வாக முறையின் கீழ் கொண்டு வரப்பட்டது. | கோல்புறூக் கமரன் சீர்திருத்தத்தினால் கண்டி கரையோரம் என இரு அலகுகளாக காணப்பட்ட இலங்கையை ஒன்றிணைந்த ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. |
| **27.** குறூமக்கலம் சீர்திருத்தத்தின் மூலம் வாக்குரிமை முறை அறிமுகமானது. | குறூமக்கலம் சீர்திருத்தத்தில் சட்டசபை உறுப்பினர்கள் 21 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| **28.** டொனமூர் அரசியல் திட்டத்தின் மூலம் நிர்வாகக் குழு முறை அறிமுகமானது. இலங்கை அரசியல் தலைவர்களுக்கும் மந்திரிசபை அரசாங்கமுறை ஆட்சியின் பயிற்சியை வழங்கியது. | டோனமூர் அரசியல் திட்டத்தில் நிர்வாகக்குழுவின் தலைவராக தேசாதிபதியே விளங்கினார். |
| **29.** சோல்பரி அரசியலமைப்பு வெஸ்ட்மினிஸ்டர் மாதிரியான கலப்பு அரசியலமைப்பு ஆட்சி முறைக்கு அடித்தளமிட்டது. | சோல்பரி அரசியலமைப்பு பாராளுமன்றமானது இரு சபைகளைக் கொண்டு காணப்பட்டது. அவர்கள் அனைவரும் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர். |
| **30.** 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பின் தேசிய அரசுப் பேரவையான மீயுயர் அதிகாரம் கொண்ட தாபனமாகும். | 1ம் குடியரசு அரசியலமைப்பின் சட்டத்துறையானது முத்துறை அதிகாரங்களையும் ஒருங்கே கொண்டிருந்தது. |

**31.** அரசியலில் இரு பகுதிகள் காணப்படுகின்றன அவ்விரு பகுதிகளும் எவை?

i. ……………………………………………………………………………………

ii. ……………………………………………………………………………………

**32.** புராதன இந்தியாவிலும் சீனாவிலும் தலைசிறந்து விளங்கிய அரசியல் சிந்தனையாளர்கள் இருவரையும் முறையே தருக.

i. ……………………………………………………………………………………

ii. ……………………………………………………………………………………

**33.** பெண்ணியல்வாத அணுகுமுறையின் மூலம் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள் 02 தருக.

i. ……………………………………………………………………………………

ii. ……………………………………………………………………………………

Education NCP - www.edncp.lk

**34.** ‘தேசங்களின் செல்வம்’, ‘சட்டத்தின் உயிர்’ ஆகிய இரு நூல்களின் ஆசிரியர்களைக் குறிப்பிடுக.

i. ……………………………………………………………………………………….......

ii. ……………………………………………………………………………………….......

**35.** கீழே குறிப்பிட்டுள்ள இரு கூற்றுக்களாலும் வெளிப்படுத்தும் இரு அரசியலமைப்பு முறைகளைப் பெயரிடுக.

i. நாடு முழுவதும் ஒரு அரசின் மூலம் ஆளப்பட்டு அரச அதிகாரம் ஒன்று குவிக்கப்பட்டு இருக்கும்.

…………………………………………………………………………………………...

ii. இரு வகையான நிறைவேற்றுப் பகுதிகளையும் கொண்டு அரசினதும் அரசாங்கத்தினதும் பொறுப்புக்கள் தனித்தனியே பிரித்து வழங்கப்பட்டிருக்கும்.

…………………………………………………………………………………………...

**36.** அரசியல் கட்சிகளின் தோற்றத்துக்குச் செல்வாக்குச் செலுத்திய இரு காரணிகளைத் தருக.

i. ……………………………………………………………………………………….......

ii. ……………………………………………………………………………………….......

**37.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களுக்கான அரச மாதிரிகளைக் குறிப்பிடுக.

i. ‘இனத்தின் சிரு‘டியே அரசாகும்.’ –

……………………………………………………………………………………….......

ii. ‘சமூகத்தில் ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவே அரசாகும்.’–சமூக ஒப்பந்த வாதம்

……………………………………………………………………………………….......

**38.** கட்சிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில்லாத வேறு இரண்டைக் குறிப்பிடுக.

i. ……………………………………………………………………………………….......

ii. ……………………………………………………………………………………….......

**39.** அரசியல் கோட்பாடுகளில் இரு பிரதான வகைகளையும் குறிப்பிடுக.

i. ……………………………………………………………………………………….......

ii. ……………………………………………………………………………………….......

Education NCP - www.edncp.lk

**40.** பணிக்குழு முறைமை பற்றிய மெக்ஸ்வெபரின் கருத்துக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

i. ……………………………………………………………………………………….......

ii. ……………………………………………………………………………………….......

**41.** பாசிசவாத செயற்பாட்டாளர்கள் இருவர்களது நூல்களைத் தருக.

i. ……………………………………………………………………………………….......

ii.……………………………………………………………………………………….......

**42.** முரண்பாட்டை செயற்பாட்டு வாதத்தின் அடிப்படையில் வகைப்படுத்த Morton touch அவர்கள் முன்வைக்கும் இரண்டு பிரிவுகளும் எவை?

i. ……………………………………………………………………………………….......

ii. ……………………………………………………………………………………….......

**43.** கோல்புறூக் அரசியல் சீதிருத்தத்தின் மூலம் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தையும் பொருளாதார மாற்றத்தையும் குறிப்பிடுக.

i. ……………………………………………………………………………………….......

ii. ……………………………………………………………………………………….......

**44.** இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் வரையறுக்கப்பட்ட வாக்குரிமையினதும் சர்வசன வாக்குரிமையினதும் சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.

i. ……………………………………………………………………………………….......

ii. ……………………………………………………………………………………….......

**45.** டொனமூர் அமைச்சரவையில் இடம்பெற்ற இரு பகுதியினரையும் குறிப்பிடுக.

i. ……………………………………………………………………………………….......

ii. ……………………………………………………………………………………….........

Education NCP - www.edncp.lk

**46.** சோல்பரி அரசியலமைப்புத் திட்டத்தில் பாராளுமன்ற இறைமைக்கு சவாலாக இருந்த இரு விடயங்களைக் குறிப்பிடுக.

i. ..........................................................................................................

ii. ..........................................................................................................

**47.** சோல்பரி அரசியலமைப்பு பிரித்தானிய அரசியலமைப்பிலிருந்து வேறுபடும் இரு விடயங்களைக் குறிப்பிடுக.

i. ..........................................................................................................

ii. ..........................................................................................................

**48.** தேசியரசுப் பேரவையின் சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்லும் இரு விடயங்களைக் குறிப்பிடுக.

i. ..........................................................................................................

ii. ..........................................................................................................

**49.** 1ம் குடியரசு அரசியல் யாப்பின் நிறைவேற்றுத் துறையின் இரு பகுதிகளையும் குறிப்பிடுக.

i. ..........................................................................................................

ii. ..........................................................................................................

**50.** 1ம் குடியரசு அரசியல் யாப்பு சோல்பரி அரசியல் யாப்பிலிருந்து வேறுபடும் விதங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

i. ..........................................................................................................

ii. ..........................................................................................................

Education NCP - www.edncp.lk